ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கண்ணங்குடி

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக3மாந்தமஹாதே3ஶிகாய நம:

# திவ்ய பிரபந்தம் போற்றும் திருக்கண்ணங்குடி

## பொதுத்தனியன்கள்

ராமாநுஜ த3யாபாத்ரம் ஜ்ஞாநவைராக்3ய பூ4ஷணம் ।
ஸ்ரீமத்3வேங்கடநாதா2ர்யம் வந்தே3 வேதா3ந்ததே3ஶிகம் ॥ **1** ॥

ஸ்ரீஶைலேஶ த3யாபாத்ரம் தீ4ப4க்த்யாதி3கு3ணார்ணவம் ।
யதீந்த்3ரப்ரவணம் வந்தே3 ரம்யஜாமாதரம் முநிம் ॥ **2** ॥

லக்ஷ்மீநாத2ஸமாரம்பா4ம் நாத2யாமுநமத்4யமாம் ।
அஸ்மதா3சார்யபர்யந்தாம் வந்தே3 கு3ருபரம்பராம் ॥ **3** ॥

யோ நித்யமச்யுதபதா3ம்பு3ஜயுக்3மருக்ம -
வ்யாமோஹதஸ்ததி3தராணி த்ரு'ணாய மேநே ।
அஸ்மத்3கு3ரோர்ப4க3வதோஸ்ய த3யைகஸிந்தோ4:
ராமாநுஜஸ்ய சரணௌ ஶரணம் ப்ரபத்3யே ॥ **4** ॥

மாதா பிதா யுவதயஸ்தநயா விபூ4தி:
ஸர்வம் யதே3வ நியமேந மத3ந்வயாநாம் ।
ஆத்3யஸ்ய ந: குலபதேர்வகுளாபி4ராமம்
ஸ்ரீமத் தத3ங்க்4ரியுக3ளம் ப்ரணமாமி மூர்த்4நா ॥ **5** ॥

பூ4தம் ஸரஶ்ச மஹதா3ஹ்வய ப4ட்டநாத2
ஸ்ரீப4க்திஸார குலஶேக2ர யோகி3வாஹாந் ।
ப4க்தாங்க்4ரிரேணு பரகால யதீந்த்3ர மிஶ்ராந்
ஸ்ரீமத் பராங்குஶமுநிம் ப்ரணதோऽஸ்மி நித்யம் ॥ **6** ॥

## பெரியாழ்வார் தனியன்கள்

கு$_3$ருமுக$_2$மநதீ$_4$த்ய ப்ராஹ வேதா$_3$நஶேஷாந்
நரபதிபரிக்லு’ப்தம் ஶுல்கமாதா$_3$துகாம:।
ஶ்வஶுரமமரவந்த்$_3$யம் ரங்க$_3$நாத$_2$ஸ்ய ஸாக்ஷாத்
த்$_3$விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி ॥

மின்னார் தட மதிள் சூழ் வில்லிபுத்தூர் என்றொரு கால் ⋆
சொன்னார் கழற்கமலம் சூடினோம் ⋆
முன்னாள் கிழி அறுத்தான் என்றுரைத்தோம் ⋆
கீழ்மையினிற் சேரும் வழி அறுத்தோம் நெஞ்சமே ! வந்து

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தான் என்று ⋆
ஈண்டிய சங்கம் எடுத்தூத ⋆
வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழி அறுத்தான் ⋆
பாதங்கள் யாமுடைய பற்று

## பெரியாழ்வார் திருமொழி – திருப்பல்லாண்டு

‡ பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு ⋆
பல கோடி நூறாயிரம் ⋆
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா ! ⋆
உன் சேவடி செவ்வி திருக்காப்பு ॥ **1.1.1** ॥

‡ அடியோமோடும் நின்னோடும் ⋆
பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு ⋆
வடிவாய் நின் வல மார்பினில் ⋆
வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு ⋆
வடிவார் சோதி வலத்துறையும் ⋆
சுடராழியும் பல்லாண்டு ⋆

படை போர் புக்கு முழங்கும் ⋆
அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே ‖ **1.1.2** ‖

வாழாட் பட்டு நின்றீர் உள்ளீரேல் ⋆
வந்து மண்ணும் மணமும் கொண்மின் ⋆
கூழாட் பட்டு நின்றீர்களை ⋆
எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் ⋆
ஏழாட் காலும் பழிப்பிலோம் நாங்கள் ⋆
இராக்கதர் வாழ் ⋆
இலங்கை பாழாளாகப் படை பொருதானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.3** ‖

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து ⋆
எங்கள் குழாம் புகுந்து ⋆
கூடு மனம் உடையீர்கள் வரம்பொழி ⋆
வந்தொல்லைக் கூடுமினோ ⋆
நாடு நகரமும் நன்கறிய ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பாடு மனம் உடைப் பத்தர் உள்ளீர் ! ⋆
வந்து பல்லாண்டு கூறுமினே ‖ **1.1.4** ‖

அண்டக்குலத்துக்கதிபதி ஆகி ⋆
அசுரர் இராக்கதரை ⋆
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த ⋆
இருடீகேசன் தனக்கு ⋆
தொண்டக் குலத்தில் உள்ளீர் ! வந்தடி தொழுது ⋆
ஆயிர நாமம் சொல்லி ⋆

பண்டைக் குலத்தைத் தவிர்ந்து ⋆
பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே ‖ **1.1.5** ‖

எந்தை தந்தை தந்தை தந்தை தம் மூத்தப்பன் ⋆
ஏழ் படி கால் தொடங்கி ⋆
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம் ⋆
திருவோணத் திருவிழவில் அந்தியம் போதில் அரியுருவாகி ⋆
அரியை அழித்தவனை ⋆
பந்தனை தீரப் பல்லாண்டு ⋆
பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே ‖ **1.1.6** ‖

தீயிற் பொலிகின்ற செஞ்சுடர் ஆழி ⋆
திகழ் திருச்சக்கரத்தின் ⋆
கோயிற்பொறியாலே ஒற்றுண்டு நின்று ⋆
குடிகுடி ஆட்செய்கின்றோம் ⋆
மாயப் பொருபடை வாணனை ⋆
ஆயிரந் தோளும் பொழி குருதி பாய ⋆
சுழற்றிய ஆழி வல்லானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.7** ‖

நெய்யிடை நல்லதோர் சோறும் ⋆
நியதமும் அத்தாணிச் சேவகமும் ⋆
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு ⋆
காதுக்குக் குண்டலமும் ⋆
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து ⋆
என்னை வெள்ளுயிர் ஆக்க வல்ல ⋆
பையுடை நாகப் பகைக்கொடியானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.8** ‖

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் ⋆
கலத்ததுண்டு ⋆
தொடுத்த துழாய்மலர் சூடிக் களைந்தன ⋆
சூடுமித்தொண்டர்களோம் ⋆
விடுத்த திசைக் கருமம் திருத்தித் ⋆
திருவோணத் திருவிழவில் ⋆
படுத்த பைந்நாகணைப் பள்ளிகொண்டானுக்குப் ⋆
பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.9** ‖

எந்நாள் எம்பெருமான் ⋆
உன்தனக்கடியோம் என்றெழுத்துப்பட்ட அந்நாளே ⋆
அடியோங்கள் அடிக்குடில் ⋆
வீடு பெற்றுய்ந்தது காண் ⋆
செந்நாள் தோற்றித் ⋆
திருமதுரையுள் சிலைகுனித்து ⋆
ஐந்தலைய பைந்நாகத் தலை பாய்ந்தவனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுதுமே ‖ **1.1.10** ‖

‡ அல்வழக்கொன்றும் இல்லா ⋆
அணி கோட்டியர் கோன் ⋆
அபிமான துங்கன் செல்வனைப்போலத் ⋆
திருமாலே ! நானும் உனக்குப் பழவடியேன் ⋆
நல்வகையால் நமோ நாராயணாவென்று ⋆
நாமம் பல பரவி ⋆
பல்வகையாலும் பவித்திரனே ! ⋆
உன்னைப் பல்லாண்டு கூறுவனே ‖ **1.1.11** ‖

‡ பல்லாண்டென்று பவித்திரனைப் ⋆
பரமேட்டியை ⋆
சார்ங்கம் என்னும் வில்லாண்டான் தன்னை ⋆
வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல் ⋆
நல்லாண்டென்று நவின்றுரைப்பார் ⋆
நமோ நாராயணாயவென்று ⋆
பல்லாண்டும் பரமாத்மனைச் ⋆
சூழ்ந்திருந்தேத்துவர் பல்லாண்டே ‖ **1.1.12** ‖

## பெரிய திருமொழி – வங்கமா முந்நீர்

‡ வங்க மா முந்நீர் வரி நிறப் பெரிய ⋆
வாள் அரவின் அணை மேவி ⋆
சங்கம் ஆர் அங்கைத் தட மலர் உந்திச் ⋆
சாம மா மேனி என் தலைவன் ⋆
அங்கம் ஆறைந்து வேள்வி நால் வேதம் ⋆
அருங்கலை பயின்று ⋆
எரி மூன்றும் செங்கையால் வளர்க்கும் துளக்கம் இல் மனத்தோர் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ‖ **9.1.1** ‖

கவள மா கதத்த கரி உய்ய ⋆
பொய்கைக் கராம் கொளக் கலங்கி ⋆
உள் நினைந்து துவள மேல் வந்து தோன்றி ⋆
வன் முதலை துணி படச் சுடு படை துரந்தோன் ⋆
குவளை நீர் முளரி குமுதம் ஒண் கழுநீர் ⋆
கொய்ம் மலர் நெய்தல் ஒண் கழனி ⋆
திவளும் மாளிகை சூழ் செழு மணிப் புரிசைத் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ‖ **9.1.2** ‖

வாதை வந்தடர வானமும் நிலனும் ⋆
மலைகளும் அலை கடல் குளிப்ப ⋆
மீது கொண்டுகளும் மீன் உரு வாகி ⋆
விரி புனல் வரி அகட்டொளித்தோன் ⋆
போதலர் புன்னை மல்லிகை மௌவல் ⋆
புது விரை மது மலர் அணைந்து ⋆
சீத ஒண் தென்றல் திசை தொறும் கமழும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.3** ॥

வென்றி சேர் திண்மை விலங்கல் மா மேனி ⋆
வெள் எயிற்றொள் எரித்தறு கண் ⋆
பன்றியாய் அன்று பார் மகள் பயலை தீர்த்தவன் ⋆
பஞ்சவர் பாகன் ⋆
ஒன்றலா உருவத்துலப்பில் பல் காலத்து ⋆
உயர் கொடி ஒளி வளர் மதியம் ⋆
சென்று சேர் சென்னிச் சிகர நன் மாடத் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.4** ॥

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய் ⋆
மூவடி நீரொடும் கொண்டு ⋆
பின்னும் ஏழ் உலகும் ஈர் அடி ஆகப் ⋆
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன் ⋆
அன்னம் மென் கமலத்தணி மலர்ப் பீடத்து ⋆
அலை புனல் இலைக் குடை நீழல் ⋆
செந்நெல் ஒண் கவரி அசைய வீற்றிருக்கும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.5** ॥

மழுவினால் அவனி அரசை மூவெழு கால் ⋆
மணி முடி பொடி படுத்து ⋆
உதிரக் குழுவு வார் புனலுள் குளித்து ⋆
வெங்கோபம் தவிர்ந்தவன் குலை மலி கதலி ⋆
குழுவும் வார் கமுகும் குரவும் நற் பலவும் ⋆
குளிர் தரு சூதம் மாதவியும் ⋆
செழுமை ஆர் பொழில்கள் தழுவும் நன் மாடத் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ‖ **9.1.6** ‖

வான் உளார் அவரை வலிமையால் நலியும் ⋆
மறி கடல் இலங்கையார் கோனை ⋆
பானு நேர் சரத்தால் பனங்கனி போலப் ⋆
பரு முடி உதிர வில் வளைத்தோன் ⋆
கான் உலா மயிலின் கணங்கள் நின்றாடக் ⋆
கண முகில் முரசம் நின்றதிர ⋆
தேன் உலா வரி வண்டின் இசை முரலும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ‖ **9.1.7** ‖

அரவு நீள் கொடியோன் அவையுள் ஆசனத்தை ⋆
அஞ்சிடாதே இட ⋆
அதற்குப் பெரிய மா மேனி அண்டம் ஊடுருவப் ⋆
பெருந்திசை அடங்கிட நிமிர்ந்தோன் ⋆
வரையின் மா மணியும் மரதகத் திரளும் ⋆
வயிரமும் வெதிர் உதிர் முத்தும் ⋆
திரை கொணர்ந்துந்தி வயல் தொறும் குவிக்கும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ‖ **9.1.8** ‖

பன்னிய பாரம் பார் மகட்கொழியப் ⋆
பாரத மா பெரும் போரில் ⋆
மன்னர்கள் மடிய மணி நெடுந் திண் தேர் ⋆
மைத்துனர்க்குய்த்த மா மாயன் ⋆
துன்னு மாதவியும் சுர புனைப் பொழிலும் ⋆
சூழ்ந்தெழு செண்பக மலர் வாய் ⋆
தென்ன என்றளிகள் முரன்றிசை பாடும் ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானே ॥ **9.1.9** ॥

‡ கலை உலா அல்குல் காரிகை திறத்துக் ⋆
கடல் பெரும் படையொடும் சென்று ⋆
சிலையினால் இலங்கை தீ எழச் செற்ற ⋆
திருக்கண்ணங்குடியுள் நின்றானை ⋆
மலை குலா மாட மங்கையர் தலைவன் ⋆
மான வேல் கலியன் வாய் ஒலிகள் ⋆
உலவு சொல் மாலை ஒன்பதோடொன்றும் ⋆
வல்லவர்க்கில்லை நல்குரவே ॥ **9.1.10** ॥

**திரு லோகநாயகி சமேத லோகநாதன் திருவடிகளே சரணம்**